ராதேக்ருஷ்ணா

நாமஜபம் என்பது மனிதர்களின் மூச்சுக்காற்றைப் போல, ஹ்ருதய துடிப்பைப் போல இடைவிடாமல் ஸ்வபாவமாக மனதிற்குள் ஸ்மரிக்கவேண்டும். இதுவே சரியான நாம ஜபம். பகவத் தரிசனம் கிடைக்க இதுவே வழி. வாழ்க்கையின் ஆனந்தம் இதுவே.

பக்தி என்பது பகவானுடன் ஒன்றுபடுவது. ஒன்றுபடுவது என்பது நாம் நினைப்பது மட்டும் அல்லது நாம் நினைப்பது போல் அன்று. நமது எல்லாமுமாக உயிர், பேச்சு, மூச்சு, உண்பது எல்லாமே பகவானுக்காகத்தான்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு அசைவும் பகவானின் விருப்பப்படியே நடக்கிறது. அதனால் எதுவும் நம்மிடத்தில் இல்லை. எனவே எல்லாவற்றையும் பகவானது திருமலர் அடிகளில் வைத்து விட்டு உனது கடமையை செய்து வர வேண்டும்.

அல்லும் பகலும் பகவானின் திருநாமங்களை
வாயார புகழ்ந்து பாடு....

அவரிடம் சரணாகதி அடைந்து விடு...
விடுதலை பெற்று விடு...

பூஜ்யஸ்ரீ ஸ்ரீஅம்மா

க்ருஷ்ணா... க்ருஷ்ணா... க்ருஷ்ணா...

# பூஜ்யஸ்ரீ ஸ்ரீ அம்மா



ராதேக்ருஷ்ணா

## த்யானம்

ஓம்! ஓம்! ஓம்!
கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா! கோவிந்தா!
ஜெய் ஜானகி காந்த ஸ்மரணம்
ஜெய் ஜெய் ராமராமா!
ஜெய் சத்குரு மகராஜ் கி ஜெய்
சமஸ்த பாகவதலுக்கு ஜெய்
கோபிகா ஜீவன ஸ்மரணம்
கோவிந்தா! கோவிந்தா!

## குரு வந்தனம்

ஹே குரு விஷ்ணும் பஜே
ஹே குரு ப்ரஹ்மம் பஜே
ஹே குரு கமலநயனம் பஜே
ஹே குரு கரகோமளம் பஜே
ஹே குரு பாதபங்கஜம் பஜே
ஹே குரு வித்யாரூபம் பஜே
ஹே குரு ஞானவைராக்யம் பஜே
ஹே குரு மோக்ஷசாதனம் பஜே
ஹே குரு வேதாரூபம் பஜே
ஹே குரு வேதாத்மஸ்மரணம் பஜே
ஹே குரு சகலசௌபாக்யம் பஜே

உந்தி பூத்த உத்தமனே வாழி
உயர்வேத நாயகனே வாழி
உலகளந்த மாயவனே வாழி
ஓதியே உணர்த்திய நாயகனே வாழி
வித்தில்லா பொருளே வாழி
விந்தையே வந்தாய் நீ வாழி
ஒப்பில்லா மாயவனே வாழி
உலகளந்தோனே என் குருவே சரணம்

கஸ்தூரீ திலகம் லலாட படலே வக்ஷ:ஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே வரமௌக்திகம் கரதலே வேணும்கரே
கங்கணம்
ஸர்வாங்கே ஹரிசந்தனம் ச கலயன்
கண்டே ச முக்தாவலிம்
கோபஸ்த்ரீபரிவேஷ்டிதோ
விஜயதே கோபாலசூடாமணி:

1. வரவேண்டும் வரவேண்டும் வரவேண்டும் கண்ணா
தரவேண்டும் தரவேண்டும் தரவேண்டும் தரிசனம்
கால்கள் பற்றி கேட்கின்றேன் கைவிடாது காக்க வேண்டும்
வேதநாத ஸ்ரீக்ருஷ்ணா வேண்டும் வரம் அருள்வாய்
வரவேண்டும் வரவேண்டும் வரவேண்டும் கண்ணா

2. என் குரல் இன்னும் நீ கேட்கவில்லையோ
என் நாதனே எனை மறந்து எங்கு சென்றாயோ
வந்து வந்து கண்ணனே வளர்ந்து நின்றானே
சொல்லிச் சொல்லி மன்னனே சொல் மறந்தேனே
என் குரல் இன்னும் நீ கேட்கவில்லையோ
நீ இல்லா என் நெஞ்சில் நினைவுமில்லையே
உனைக்காணா கண்ணிலும் காட்சி இல்லையே
என் குரல் இன்னும் நீ கேட்கவில்லையோ
என் நாதனே எனை மறந்து எங்கு சென்றாயோ
எனையறிந்து கண்ணா நீ மகிழ்ந்து அருளுவாய்
வேதகானம் உன்னையே சேர வேண்டுமே
என் குரல் இன்னும் நீ கேட்கவில்லையோ
என் நாதனே எனை மறந்து எங்கு சென்றாயோ

3. நீல நிற பாலனே க்ருஷ்ணா க்ருஷ்ணா
நீ இன்றி வாழ்வும் நிறைவோ கண்ணா
மதுராபுரி மன்னா எந்தன் கண்ணா
வேதநாத ப்ரபுவே வா வா கண்ணா
நீல நிற பாலனே க்ருஷ்ணா க்ருஷ்ணா

4. வா கண்ணா வா கண்ணா
வந்து என்னை ஆள் கண்ணா
வந்து என்னுடன் ஆடி பாடி
இன்பம் ஒன்றே தரும் கண்ணா
வா கண்ணா வா கண்ணா
வந்து என்னை ஆள் கண்ணா
வேதநாதா க்ருஷ்ண முகுந்தா
எங்கு சென்று மறைந்தாயோ
வா கண்ணா வா கண்ணா
வந்து என்னை ஆள் கண்ணா

5. தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா





கண்ணனே வாராய் கண்ணனே வாராய்
கார்முகில் வண்ணனே கண்ணனே வாராய்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
தேடியே பிடித்து சேலையை இழுத்து
வெள்ளை மனதை வெற்றியே கொண்டாய்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
கருநீல ஆடையும் காட்டும் கண் ஜாடையும்
கைகளால் இழுத்தும் கட்டிக் கொண்டாடியும்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
வீட்டினுள் வந்தும் நடுவினில் நின்றும்
மாலையாய் அணிந்தும் மார்புற தழுவியும்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
மாதர்கள் அழைக்க கூடல் மாநகர் சென்று
மாணிக்கமான மாதென்னை மறுத்தாய்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
கார்த்திகை மாதம் பின் மார்கழி மாதம் போய்
காத்திருந்த மட மாது கரைந்தாள்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
நின்ற திருக்கோலம் கண்ட திருமேனி
காணாத பேதை கண்ணீரை சிந்த
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
ஆடை அணியும் பொற்காசும் நகையும்
பூட்டிக் கொண்ட கண்ணன் ஏமாற்றிச் சென்றான்
தநதந்தினானா தநதந்தினானா
தநதந்தினானா தநதந்தினானா
வைபவ வைபோகம் காணவே வேதம்
வேண்டுகிறாள் நீ அறிவாயோ கண்ணா

6. நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
ப்ருந்தாவனசர க்ருஷ்ணா ப்ரேமஸ்வரூபா க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
பக்தஜனப்பிரிய க்ருஷ்ணா பரமானந்தா க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா

ராதா லோலா க்ருஷ்ணா ராஜீவலோசன க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
கௌஸ்துபஹாரா க்ருஷ்ணா கௌந்தேயஸஹ க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
காளிய மர்த்தன க்ருஷ்ணா கமலநயன க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
மந்த ஹாஸனன க்ருஷ்ணா மதுரநிவாஸ க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
மாதவ பாலா க்ருஷ்ணா மாயாலீலா க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
கோபீ லோலா க்ருஷ்ணா கோவிந்த முகுந்தா க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
பரிமள முகுந்தா க்ருஷ்ணா பாபவிமோசன க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
வேணுகானப்ரிய க்ருஷ்ணா வேதவிலாச க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா
வைபவ பவஹரே க்ருஷ்ணா வைபோக ஹரே க்ருஷ்ணா
நந்தகுமாரா க்ருஷ்ணா நவநீதசோரா க்ருஷ்ணா

7. எங்கும் தேடி தேடி வந்தேன் காணவில்லையே
கண் மறைத்து எனை விடுத்து எங்கு சென்றாயோ
இங்கு வந்து காட்சி தந்து ஆள வேண்டுமே
ஸ்ரீக்ருஷ்ணா என் கண்ணா வேதநாயகா
எங்கும் தேடி தேடி வந்தேன் காணவில்லையே

8. மல்லிகை மலரும் மாலை வாராய் கண்ணா
மனம் மகிழ நீ பாடி ஆட வா
எதிர்நின்று நீ வந்து சேர வேண்டுமே
கோடி இன்பம் தரும் வேத நாயகா
கோ . . . டி இன்பம் தரும் வேத நாயகா
கோடி இன்பம் தரும் வேத நாயகா

9. ஸ்ரீ ஹரி க்ருஷ்ணா ஸ்ரீதர க்ருஷ்ணா வேதநாயகா
மதுராபுரியை ஆளும் நீயே எந்தன் கண்ணா
யசோதை பாலா யசோதை பாலா
கோபீஜனப்ரிய கோவிந்த முகுந்தா வேதநாயகா
வேதப் பொருளே கோபால க்ருஷ்ணா நீயே எந்தன்
மன்னா
யசோதை [illegible] யசோதை பாலா
ஸ்ரீ ஹரி க்ருஷ்ணா ஸ்ரீதர க்ருஷ்ணா வேதநாயகா





10. சந்த்ர வதனா ஹே க்ருஷ்ணா
ஹே மதுராபுரி வாசா
அம்புஜாக்ஷா ஆனந்த ரூபா ஆனந்த ரூபா
வா கண்ணா அருள் கண்ணா வேதநாத கண்ணா
சந்த்ர வதனா ஹே க்ருஷ்ணா

11. பாடுவோம் ஆடுவோம் வாருங்கள் கோபியரே
ஆடுவோம் கூடுவோம் வாருங்கள் கோபியரே
குழலூதும் நாதம் கேட்டு வாருங்கள் கோபியரே
வேதநாத ப்ரபுவே வேணுகான க்ருஷ்ணா
பாடுவோம் ஆடுவோம் வாருங்கள் கோபியரே
ஆடுவோம் கூடுவோம் வாருங்கள் கோபியரே

12. கண்மணியே வாராய் கண்மணியே வாராய்
அன்புடன் நான் அழைத்தால் வாராதிருப்பதேனோ
ஹே க்ருஷ்ணா வாராய் கண்ணா
கண்மணியே நீதான் கள்ள க்ருஷ்ணா
ராதை மனம் தனை மாற்றி வருத்திய கபட நாடகதாரி
வேதநாத ப்ரபு நீதான்
ராதாதேவி ப்ரபு நீதான்
ராஸம் ஆடும் ப்ரபு நீதான்
கண்மணியே வாராய் கண்மணியே வாராய்

13. ஓடி ஓடி மறைந்ததேன் கண்ணனே
வந்து என்னை நீ காப்பாற்ற வேண்டுமே
இங்கு வந்து அன்பைத்தர வேண்டுமே
வேதநாத ஹ்ருதய சஞ்சாரியே
ஓடி ஓடி மறைந்ததேன் கண்ணனே

14. ஆடையைக் கொண்டு சென்றாயே
கோபியரின் ஆடையைக் கொண்டு சென்றாயே
கைகளை தூக்கிக் கொண்டு கேளுங்கள் என்று சொல்லி
ஆடையைக் கொண்டு சென்றாயே
கோபியரின் ஆடையைக் கொண்டு சென்றாயே
நீயே கணவன் என்று கொண்டாடும் கோபியரின்
ஆடையைக் கொண்டு சென்றாயே
கோபியரின் ஆடையைக் கொண்டு சென்றாயே
உன்னையே நம்பி வந்தேன் கண்ணா நீ தள்ளலாமோ
ஆடையைக் கொண்டு சென்றாயே
கோபியரின் ஆடையைக் கொண்டு சென்றாயே
வேதத்தின் நாயகனே வேண்டுகின்றேன் வா வா
கண்ணா

ஆடையைக் கொண்டு சென்றாயே
கோபியரின் ஆடையைக் கொண்டு சென்றாயே

15. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வேண்டி
கண்ணனைத் தேடி வந்தாளே ராதை
முழுமதி நிறைந்த நிலவினில் ராதை
முத்துக்கள் கோர்த்து மாலையைச் சேர்த்தாள்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வேண்டி
கண்ணனைத் தேடி வந்தாளே ராதை
ராதையின் குரலினை கேட்காமல் கண்ணன்
யசோதை பாலன் கோகுலம் சென்றான்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வேண்டி
கண்ணனைத் தேடி வந்தாளே ராதை
வைபவம் வைபவம் வைபவம் என்று
வைபோக க்ருஷ்ணன் வந்தானே இன்று
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வேண்டி
கண்ணனைத் தேடி வந்தாளே ராதை

16. ஸ்ரீக்ருஷ்ணா ஸ்ரீக்ருஷ்ணா சின்மய ரூபனே (2 தடவை)
தேவகி மைந்தனே வரம் அருள்வாய் (2 தடவை)
ஸ்ரீக்ருஷ்ணா ஸ்ரீக்ருஷ்ணா சின்மய ரூபனே
தேவகி மைந்தனே வரம் அருள்வாய்
துன்பமின்றி இன்பம் ஒன்றே உன் நாமம் (2 தடவை)
சொல்லச் சொல்ல தினம் பெருகும் (2 தடவை)
ஸ்ரீக்ருஷ்ணா ஸ்ரீக்ருஷ்ணா சின்மய ரூபனே
தேவகி மைந்தனே வரம் அருள்வாய்
சிலாரூபமாய் கோவிலில் நின்றாய் (2 தடவை)
சிந்தனைக்குகினிய எண்ணங்கள் தந்தாய் (2 தடவை)
ஸ்ரீக்ருஷ்ணா ஸ்ரீக்ருஷ்ணா சின்மய ரூபனே
தேவகி மைந்தனே வரம் அருள்வாய்
ப்ரம்மனும் நீயே விஷ்ணுவும் நீயே (2 தடவை)
வேதாகமப் பொருளும் நீயே (2 தடவை)
ஸ்ரீக்ருஷ்ணா ஸ்ரீக்ருஷ்ணா சின்மய ரூபனே
தேவகி மைந்தனே வரம் அருள்வாய்

17. நந்த நந்த பாலனே க்ருஷ்ணா க்ருஷ்ணா
நவநீத சோரனே " "
கொண்டல்வண்ண நாயகா " "
குமுதவல்லி ப்ரிய " "





தேவகி பாலனே " "
தேடி வந்து அருள்புரி " "
முத்து முத்துச் சிரிப்பினில் " "
முகுந்தவல்லி ப்ரிய " "
வேத சாஸ்த்ர பொருளே " "
வேதாத்ம ஸ்மரணமே " "
வைபவபவ ஹரே " "
வைபோக போக ஹரே " "

18. ஸ்ரீ க்ருஷ்ணா வருவாய் வந்து என்னை ஆளுவாய்
நந்தபாலா நந்தபாலா என்றே பாடுகின்றேன்
வேதநாத ரூப வடிவாகி வந்தே அருளுவாய்
ஸ்ரீ க்ருஷ்ணா வருவாய் வந்து என்னை ஆளுவாய்

19. கிண்கிணி நாதத்துடன் ஆடி வா கண்ணா
கிரிதாரி கோபால க்ருஷ்ணா க்ருஷ்ணா
நடந்து நீ வந்தால் எந்தன் கண்ணா
மனம் பொங்கி ஆடுதே வேத நாத கண்ணா
கிண்கிணி நாதத்துடன் ஆடி வா கண்ணா

20. கண்ணா கண்ணா என்று சொன்னால் ஏலேலங்கடி ஏலோ
கயல்விழி மீன்கள் துள்ளும் (2 தடவை)
கோபால் கோபால் என்று சொன்னால் " "
கோபியரின் மனம் மகிழும் " "
க்ருஷ்ணா க்ருஷ்ணா என்று சொன்னால் " "
கிண்கிணி நாதம் கேட்கும் " "
முத்து முத்துச் சிரிப்பினில் " "
முல்லைவன பூ மலரும் " "
முகுந்தா முகுந்தா என்று சொன்னால் " "
மோக்ஷம் மிக எளிதாகும் " "
வேதமதனை மாற்றிக் கொண்டாய் " "
வேண்டும் வரம் கிடைக்குமடி " "

21. கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
கம்பீரமானவன்டி கம்சனைக் கொன்றவன்டி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
மன்னனும் அவனேயடி மக்களும் அவனேயடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
பார்க்கின்ற பொருளுமடி பாடுகின்ற கீதமடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
எண்ணுகின்ற எண்ணமடி எழுகின்ற கோலமடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி

அன்புள்ள உள்ளமடி அஞ்சாத நெஞ்சமடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
கொஞ்சிடும் கோபியடி கோபால க்ருஷ்ணனடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
குருவான பிள்ளையடி கும்பிடும் தெய்வமடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
கோலமயில் பீலியடி கோவிந்த க்ருஷ்ணனடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
வெண்ணையைத் தின்பவன்டி வெள்ளைமனத் திருடனடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
வெற்றியை தருபவன்டி வேதாந்த வித்தகனடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
கொஞ்சி கொஞ்சி வருவானடி கெஞ்ச கெஞ்ச
மறைவானடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
கூப்பிடவே வருவானடி கூடி ஆடி களிப்பானடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
மாதருக்கு தொல்லையடி மானம் மற்றும் காப்பவன்டி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி
வேதத்தின் நாதனடி வேண்டும் வரம் தருவானடி
கண்ணனை பாடுவோமடி காதலை சொல்வோமடி

22. ராதா தேவி நாயகா வேதம் அழைக்கிறாள்
கோபியைக் காண கண்ணா நீ வா வா
வெண்ணையைத் திருடி உண்டவனே வா வா
உரலுடன் கண்டுண்ட மாயவனே வா வா
ஊரெல்லாம் கொண்டாடும் நாயகனே வா வா
த்ரௌபதி மானம் காத்தவனே வா வா
வேதத்தின் உட்பொருள் வேண்டுகின்றேன் வா வா
குன்றினை குடையாய் கொண்டவனே வா வா
வைபவ பவ ஹரே க்ருஷ்ணா நீ வா வா
ராதா தேவி நாயகா வேதம் அழைக்கிறாள்

23. கண்ணா வா வா மணிவண்ணா வா வா
கண் எதிரே வந்து நீ காட்சி தருவாய்
பின்னலை பின்னிக் கொண்டு கண்ணா நீ செல்லும் போது
கைகளால் உன்னை நான் கட்டிக் கொள்ளுவேன்
கண்ணா வா வா மணிவண்ணா வா வா
கண் எதிரே வந்து நீ காட்சி தருவாய்
குழந்தையாய் நின்று கொஞ்சி நீ சிரித்தால்
கோடி இன்பம் இன்பம் என்று கூடிக் கொள்ளுவேன்





கண்ணா வா வா மணிவண்ணா வா வா
கண் எதிரே வந்து நீ காட்சி தருவாய்
கோபாலா க்ருஷ்ணா முகுந்தா என்றழைத்து
வேதத்தின் வேதனையை தீர்க்கச் சொல்லுவேன்
கண்ணா வா வா மணிவண்ணா வா வா
கண் எதிரே வந்து நீ காட்சி தருவாய்

24. கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
மன்னன் வந்தான் எங்கள் மன்னன் வந்தான்
மகிழ்ச்சியை தந்திட மன்னன் வந்தான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
சொல்லிச் சென்றான் கண்ணன் சொல்லிச் சென்றான்
சொல்லினை முத்தாய் சொல்லிச் சென்றான்
அள்ளித் தந்தான் கண்ணன் அள்ளித் தந்தான்
ஆராவமுதினை அள்ளித் தந்தான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
கூட்டிச் சென்றான் கண்ணன் கூட்டிச் சென்றான்
கூடி ஆடிட கூட்டிச் சென்றான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
காட்டிச் சென்றான் கண்ணன் காட்டிச் சென்றான்
கண்ணால் ஜாடையை காட்டிச் சென்றான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
அதிர வந்தான் கண்ணன் அதிர வந்தான்
புவனம் முழுதும் அதிர வந்தான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
மண்ணைத் தின்றான் கண்ணன் மண்ணைத் தின்றான்
யசோதை ஏமாற மண்ணைத் தின்றான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
மாயம் செய்தான் கண்ணன் மாயம் செய்தான்
மாய உலகை வாயில் கொண்டான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
வெண்ணை கேட்டான் கண்ணன் வெண்ணை கேட்டான்

கையில் நிறைய வெண்ணை கேட்டான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
குழல் ஊதினான் கண்ணன் குழல் ஊதினான்
கோபியர் கூடிட குழல் ஊதினான்
குடையாய் கொண்டான் கண்ணன் குடையாய் கொண்டான்
கோவர்த்தன கிரி குடையாய் கொண்டான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
தீயை உண்டான் கண்ணன் தீயை உண்டான்
காட்டுத் தீயை கண்ணன் உண்டான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
சாத்திக் கொண்டான் கண்ணன் சாத்திக் கொண்டான்
தோளினில் மாலையாய் சாத்திக் கொண்டான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
நிதியை தந்தான் கண்ணன் நிதியை தந்தான்
சங்க பதும நிதியை தந்தான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
எல்லாம் தந்தான் கண்ணன் எல்லாம் தந்தான்
மகிழ்ச்சியாய் வாழ எல்லாம் தந்தான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்
வைபவ கண்ணன் வந்து நின்றான்
வைபோகம் என்று வேதம் சொன்னான்
கண்ணன் வந்தான் எங்கள் கண்ணன் வந்தான்
காதலைச் சொல்லிட கண்ணன் வந்தான்

25. பிருந்தாவனமே என் மனக் கோயில்
பீதாம்பரதர நீல வண்ணா
பீதாம்பரதர நீல வண்ணா
குழல் ஊதும் நாதனே குளிர்ந்திடும் மனமே
வந்தெனை காப்பாய் வந்தெனை காப்பாய்
அருள் தர வேண்டும் வேதநாதா
பிருந்தாவனமே என் மனக் கோயில்

26. யசோதை பாலா கோபி மணாளா
நீ வந்தாலே எங்கும் ஆனந்தம் காண்போம்
வேதத்தின் நாயகனே க்ருஷ்ணா நீ வாராய்





ஹே முரளி கோபாலா ஹே க்ருஷ்ணா முகுந்தா
யசோதை பாலா கோபி மணாளா
நீ வந்தாலே எங்கும் ஆனந்தம் காண்போம்
ஆடையை இழுத்து நீ வெண்ணையை கேட்பாய்
யாசோதை பாலா கோபி மணாளா
நீ வந்தாலே எங்கும் ஆனந்தம் காண்போம்

27. அஞ்சேல் அஞ்சேல் என்று சொன்ன
அஞ்சன வண்ணனே
கொஞ்சும் கொஞ்சும் என்று கேட்ட
கோபியர் மனோஹரா
மஞ்சம் மஞ்சம் என்று கேட்டால்
மடியை நீரும் தருவீரோ
தஞ்சம் தஞ்சம் என்று வந்தால்
தாவி என்னை அணைப்பீரோ
கன்னல் கன்னல் என்று கேட்டால்
கனியிதழில் கிடைக்குமோ!
ராதே ராதே என்று வந்து
ராஸ லீலை புரிவாயோ!
வேதம் வேதம் என்று வந்தால்
வேண்டும் வரம் கிடைக்குமே
அஞ்சேல் அஞ்சேல் என்று சொன்ன
அஞ்சன வண்ணனே

28. என் அருமருந்தே என்னை நீ காப்பாற்று
இருளினில் ஒளியாய் வந்து நீ வழிகாட்டு
கண்ணா வா வேத நாதா வா
என் அருமருந்தே என்னை நீ காப்பாற்று

29. வருவானா கண்ணன் என்று
வந்தாளே வாசலில் ராதை
தேன் போல பேசவே கண்ணன்
தேடினால் வருவானன்றோ
வருவானா கண்ணன் என்று
வந்தாளே வாசலில் ராதை
கூட்டமாய் கூடிடும் பெண்கள்
நடுவினில் ஆடிடும் கண்ணன்
வருவானா கண்ணன் என்று
வந்தாளே வாசலில் ராதை
கெஞ்சிடும் கோபிகளுடனே
கொஞ்சியே ஆடிடும் கண்ணன்

வருவானா கண்ணன் என்று
வந்தாளே வாசலில் ராதை
வேதம் தான் கூப்பிடுகின்றாள்
வேதனை தீர்ப்பாய் கண்ணா
வருவானா கண்ணன் என்று
வந்தாளே வாசலில் ராதை

30. கோவிந்தம் விந்தம் பஜே கோபால பாலம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே
ராதாரமணம் பஜே ராஜீவலோசம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே

கோவர்தனதாரி பஜே கோபால க்ருஷ்ணம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே
நந்தகிஷோரம் பஜே நவநீதசோரம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே

கோபிஜனப்ரியம் பஜே கோபால முகுந்தம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே
பாதாரவிந்தம் பஜே பங்கஜநேத்ரம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே

வேணுவிலோலம் பஜே விஜய கோபாலம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே
வைபவபாவம் பஜே வைபோக போகம் பஜே
வேதவிலாஸம் பஜே வேத முகுந்தம் பஜே
கோவீந்தம் விந்தம் பஜே கோபால பாலம் பஜே

31. வைகுந்தன் தூங்கிவிட்டால்
வையமே தூங்குமன்றோ
தூங்கவா கண்ணன் பிறந்தான்
த்வாரகை சிறக்கப் பிறந்தான்

கண்ணனின் உறக்கமென்பது
கள்ளமே நிறைந்ததன்றோ

தொட்டிலில் இருந்த கண்ணன்
தூளாக்கி குதித்தான் அன்றோ

கோபிகள் குளிக்கச் சென்றால்
ஏமாற்றி எடுப்பான் வெண்ணை

சோலையின் நடுவில் சென்று
ராதையை அணைத்தான் அன்றோ





வேதத்தின் நாதன் கண்ணன்
வேண்டினால் தருவான் இன்பம்

ராத்திரி நேரம் தன்னில்
ராதையை கூடுவான்

கன்னத்தில் கன்னம் வைத்து
கனிபாதம் சிரிப்பை சிந்தும்

வேதத்தின் வேண்டுதல் எல்லாம்
வேறல்ல கண்ணன் தானே

வைகுந்தன் தூங்கிவிட்டால்
வையமே தூங்குமன்றோ

32. க்ருஷ்ணா முகுந்தா மனமோகன கண்ணா
ராதை மனம் கொள்ளை கொண்ட ஸ்ரீ ஹரி க்ருஷ்ணா
வந்தே அருளுவாய் யசோதை பாலா
ஆஹா ஆஹா இன்பம் இன்பம் வேதநாதனே
க்ருஷ்ணா முகுந்தா மனமோகன கண்ணா

33. கோபத்தில் நீயிருந்தால் கோதை நான் என்ன செய்வேன்
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
கொஞ்சும் உன்னை கண்டபின்னும் தஞ்சமென்று நானும் வந்தேன்
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
கோபியாய் நான் இருக்கேன் கோகுலத்தை இங்கே கண்டேன்
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
காப்பவன் நீயே அன்றோ காதலை என்று சொல்வேன்
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
கூட்டமாய் கூட வந்தோம் வாட்டமே தீர்ப்பாய் கண்ணா
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
கோடியில் ஒன்று என்று கொண்டாடி மகிழ்வோம் நாங்கள்
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
கண்ணனை கண்ட பின்னும் காணவே ஏதும் உண்டோ
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
நீயாக நானும் ஆனேன் நானக நீயும் வேண்டும்
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே
வேதமே வேண்டுகின்றாள் வேதனைத் தீர்க்க வேண்டும்.
க்ருஷ்ணனே என் கண்ணனே க்ருஷ்ணனே என் கண்ணனே

34. கொண்டாட்டம் கொண்டாட்டம் கொண்டாட்டம்
கோபியர்க்கு கொண்டாட்டம்
    கோகுலத்தில் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
நளகூப மணிக்ரீவன்
    நடுவில் வந்தால் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
நாகபடம் மீதில்
    நடனமாடக் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
யசோதை மடியில்
    பால் குடித்தல் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
யாதவகுல கண்ணன்
    கண்பார்வை கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
மழை பெய்தால் கொண்டாட்டம்
    மண்ணைத் தின்றால் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
குடைபிடித்தால் கொண்டாட்டம்
    உரல் இடித்தால் கொண்டாட்டம் (கொண்டாட்டம்)
வேதநாதனே கொண்டாட்டம்
    வேதநாதனே கொண்டாட்டம்.
கொண்டாட்டம் கொண்டாட்டம் கொண்டாட்டம்

---

## பொது தர்மங்கள்

1. எந்த ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் போதும் பகவானை தியானம் செய்து விட்டு ஆரம்பித்தால் நல்லதே நடக்கும்.
2. முதலில் நாம் நமது வார்த்தையை மதிக்கக் கற்று கொள்ள வேண்டும். பிறகு தான் மற்றவர்கள் நம் வார்த்தையை மதிப்பார்கள்.
3. வாழ்க்கையில் எல்லோரையும் எல்லா விஷயத்திலும், எல்லா சமயங்களிலும், எல்லா நிலைகளிலும் சமாதானப்படுத்துவது என்பது இயலாத காரியமாகும். அப்படி நாம் அவர்களை சமாதானப்படுத்துகிறோம் என்று நினைப்பது மதியீனமாகும்.
4. வாழ்வில் முன்னேற குருபக்தி மிக மிக அவசியம்.
5. யாரும் யாருக்காகவும் வருந்தக்கூடாது. தன்னைப் பற்றி வருந்தவும் யாருக்கும் அதிகாரம் கிடையாது.
6. சந்தோஷமாக இருப்பது உனது கடமை.





## ஸ்த்ரீ தர்மங்கள்

1. வாரம் ஒரு முறையாவது உரக்க பஜனை செய்யவேண்டும்.
2. விடியற்காலையில் எழுந்திருக்கவேண்டும்.
3. க்ருஹலக்ஷ்மி என்று சொல்லப்படுகிற ஸ்திரீகள், விடியற் காலையில் வாசலில் ஜலம் தெளித்து பெருக்கி கோலம் போட வேண்டும்.
4. குங்குமத்தினால் மட்டுமே பொட்டு இட்டுக் கொள்ள வேண்டும்.
5. தலைமுடியை வெட்டிக்கொண்டோ, விரித்துக் கொண்டோ நடமாடக் கூடாது. விதவைகளுக்கு மட்டுமே தலைமுடியை வெட்டிக் கொள்ளும் அதிகாரம் உள்ளது.
6. அங்க கவர்ச்சி காட்டாமல், ஆடை அணிய வேண்டும்.
7. பிற வீட்டு விஷயங்கள், தன் வீட்டு பெரியவர்கள் பற்றி வம்பு பேசவே கூடாது.
8. கிடைத்ததில் த்ருப்தி பெற வேண்டும்.
9. வருவதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
10. பகவத் த்யானம் வேண்டும்.
11. பக்தியுடன் குழந்தையை வளர்க்க வேண்டும்.

## மங்களம்

ராதே க்ருஷ்ணனுக்கு மங்களம்
யசோதை பாலனுக்கு மங்களம்
த்வாரகை நாதனுக்கு மங்களம்
வேதநாத ப்ரபுவுக்கு மங்களம்
வேணுகாண க்ருஷ்ணனுக்கு மங்களம்

ஓம்.... ஓம்.... ஓம்
லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து...
ஓம் சாந்தி.... சாந்தி..... சாந்தி :
ஜெய் ஸத்குரு மஹராஜ்கி ஜெய்
சமஸ்த பாகவதலுக்கு ஜெய்
ஜெய் ஸ்ரீ ராதேக்ருஷ்ணா ஸத்ஸங் கி ஜெய்
ஜெய் ஸ்ரீ பூஜ்யஸ்ரீ ஸ்ரீ அம்மாவுக்கு ஜெய்
சர்வம் குருவார்ப்பணம்

ராதேக்ருஷ்ணா

**Copy Rights ©**

**RadheKrishna Satsangam reservers all the rights over this electronic book.**

**You are free to distribute in electronic form as is but alteration or inclusion of these files with other sources in any form is strictly prohibited.**